**செ. கு. எண்: 166** **நாள்: 28.09.2018**

<u>மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. எடப்பாடி K.பழனிசாமி** அவர்களின் அறிக்கை – 28.9.2018</u>

திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், கல்லாபுரம் கிராமத்தைச் சேர்ந்த திரு. நடராஜ் என்பவரின் மனைவி திருமதி சரஸ்வதி என்கிற எலையக்கா என்பவர் ஆடு மேய்த்துக் கொண்டிருந்த போது, எதிர்பாராதவிதமாக மின்வேலியில் சிக்கியதில் மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம், மகாராஜாசமுத்திரம் கிராமத்தைச் சேர்ந்த திரு. ராஜேந்திரன் என்பவரின் மனைவி திருமதி ஆனந்தி என்பவர் மழையின் காரணமாக அறுந்து கிடந்த மின்கம்பியை தொட்டதில், மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யம் வட்டம், கோடியக்கரை கிராமத்தைச் சேர்ந்த திரு. ராமச்சந்திரன் என்பவரின் மகன் திரு. சக்திவேல் என்பவர் அறுந்து கிடந்த மின்கம்பியை மிதித்ததில் மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

சென்னை மாவட்டம், மயிலாப்பூர் வட்டம், திருவல்லிக்கேணியைச் சேர்ந்த திரு. முகமது உசேன் என்பவரின் மகன் திரு. ரபி உசேன் என்பவர் தேங்கிய மழை நீரில் மின்கசிவு ஏற்பட்டு, மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

தண்டையார்பேட்டை வட்டம், கொடுங்கையூரைச் சேர்ந்த திரு. ராஜேந்திரன் என்பவரின் மகன் திரு. ஜெயராஜ் என்பவர் மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

கன்னியாகுமரி மாவட்டம், தோவாளை வட்டம், மாதவலாயம் கிராமத்தைச் சேர்ந்த திரு. ரெத்தினராஜ் என்பவர் மின்கம்பத்தில் ஏறிய போது, மின்கம்பம் முறிந்து விழுந்ததில், பலத்த காயமடைந்து, சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டை வட்டம், பெரியபிள்ளை வலசை கிராமத்தைச் சேர்ந்த திரு. சண்முகத்தேவர் என்பவரின் மகன் திரு. கருப்பசாமி என்பவர் மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

தருமபுரி மாவட்டம், பாப்பிரெட்டிப்பட்டி வட்டம், கெடகார அள்ளி கிராமத்தைச் சேர்ந்த திரு. தனபால் என்பவரின் மகன் திரு. கோட்டீஸ்வரன் என்பவர் எதிர்பாராதவிதமாக மின் கம்பியை மிதித்ததில் மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டம், நாரவாரிக்குப்பம் கிராமத்தைச் சேர்ந்த திரு. முகமது யூசுப் என்பவரின் மகன் திரு. குத்புத்தீன் என்பவர் பலத்த காற்று மழையின் காரணமாக மின் கம்பி அறுந்து அவர் மீது விழுந்ததில், மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

திருவண்ணாமலை மாவட்டம், கலசபாக்கம் வட்டம், காப்பலூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. ரேணு என்பவரின் மனைவி திருமதி கிருஷ்ணவேணி என்பவர் மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டம், ஹைவேவிஸ் பேரூராட்சியில் பணிபுரிந்து வந்த திரு. பாலமுருகன் என்பவர் மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

உத்தமபாளையம் வட்டம், க.புதுப்பட்டி கிராமம், மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழக பணியாளர் திரு. சுப்புராஜ் என்பவர் மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

விழுப்புரம் மாவட்டம், விக்கிரவாண்டி வட்டம், பகண்டை கிராமத்தைச் சேர்ந்த திரு. ராமச்சந்திரன் என்பவரின் மகன் திரு. குமார் என்பவர் விவசாய நிலத்திற்கு சென்ற போது, அறுந்து கிடந்த மின்கம்பியை மிதித்ததில், மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

திருச்சிராப்பள்ளி மாவட்டம், லால்குடி வட்டம், திருமங்கலம் கிராமத்தைச் சேர்ந்த திரு. நாச்சிமுத்து என்பவரின் மகன் திரு. வள்ளுவர் என்பவர் தென்னை மரக்கிளையை வெட்டும் போது, மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்த துயரச் சம்பவங்களில் உயிரிழந்த **14** நபர்களின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேற்கண்ட துயரச் சம்பவங்களில் உயிரிழந்த **14** நபர்களின் குடும்பத்திற்கு தலா மூன்று லட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க உத்தரவிட்டுள்ளேன்.

**K. பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**